# அகலவத்த பிரதேச சபை
# கழுத்துறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 05 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 02 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் அகலவத்த பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அகலவத்த பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வாகனத்தைத் திருத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உதிரிப்பாகங்களின் செலவினங்கள் வாகனத்திருத்த செலவினமாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக இறுதியில் எஞ்சிய இருப்பாக கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. சில வருடங்களாக ஒன்றுசேர்க்கப்பட்டு முன்கொண்டுவரப்பட்ட பெறுமதி ரூபா 1,031,433 ஆக இருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 86,667,547 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,274,366 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 8,861,458 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,368 | 2,110 | 625 |
| (ii) | வாடகை | 7,594 | 7,616 | 75 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 152 | 152 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,758 | 1,758 | - |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,231,075 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,997,334 |

**2.3 செயற்பாட்டு / முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1993 தொடக்கம் 2006 வரையான காலத்தில் செலுத்தப்பட்ட ரூபா 273,904 கூட்டுத்தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதியான 2011 செப்தெம்பர் 30 வரையிலும் இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 218 ஆவது விதியின் பிரகாரம் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒருதடவை சபையின் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தர்மபால பொது நூலகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மீளக் கையளிக்கப்படாத 116 புத்தகங்களின் பெறுமதியான ரூபா 10,824 தொகையினை உரியவர்களிடமிருந்து அல்லது பிணை காரர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 மின்சாரப் பொருள் இருப்புக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மின்சாரப் பொருட்கள் கொள்வனவின் போது களஞ்சியத் தேவைகள் தொடர்பாக களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரின் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 மார்ச் 28 தொடக்கம் செப்தெம்பர் 28 வரை விநியோகிக்கப்பட்ட ரூபா 119,099 தொகையான மின்சார பொருட்களுக்குரிய 17 விநியோகக் கட்டளைகளில் வேலை அத்தியட்சகர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர் /

செயற்பொறுப்பு உத்தியோகத்தர் அல்லது ஏனைய உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் அந்த விநியோகித்தல்கள் செயலாளரினால் சிபார்சு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒவ்வொரு தினத்திலும் மின்சார உபகரணங்கள் பொருத்திய வீதிகளின் மின்சாரக் கம்பங்கள் உரியவாறு குறிப்பிடப்பட்டு பொருட்கள் விநியோகிக்கப்பட்டிராததுடன் பொருத்தப்படாத எஞ்சிய பொருட்கள் மீள களஞ்சியத்திற்கு கையளித்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) சபை அதிகாரப் பிரதேசத்தில் மின்சார விளக்குகளுடன் கம்பத்தின் இலக்கம் இடப்பட்டிருக்கவில்லை. 2010 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலும் இது தொடர்பான அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவைகள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(v) 2011 செப்தெம்பர் 15 தொடக்கம் 28 வரை 6 விநியோகக் கட்டளை மூலம் விநியோகிக்கப்பட்ட ரூபா 81,743 தொகையான மின்சாரப் பொருட்கள் கணக்காய்வுத் திகதியான 2011 ஒக்தோபர் 04 வரையிலும் இருப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை

(vi) 2011 செப்தெம்பர் 29 ஆந் திகதி 06 மின்சாரப் பொருள் விடயங்களின் பௌதீக தெரிவுப் பரிசோதனையின் போது ஒரு பொருள் விடயத்தில் 02 பொருள் அலகுகள் பற்றாக்குறையும் 05 பொருள் விடயங்களில் 40 பொருள் அலகுகள் மிகையும் வெளிப்படுத்தப்பட்டன.

## 2.5 ஒப்பந்த நிருவாகம்

### பிம்புர புஞ்சிகந்த வீதியில் சிறுகற்கள் இடுதல்

101 மீற்றர் நீளமாகவும் 2.5 மீற்றர் அகலமாகவும் உள்ள பிம்புர புஞ்சிகந்த வீதியில் கொங்கீரீட் துண்டுக் கற்கள் இடும் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 495,110 ஆகும். மதிப்பீட்டின் வேலை இல. 02 இன் பிரகாரம் வீதியின் இருபக்கத்தின் அத்திவாரம் தொடக்கம் 0.22 மீற்றர் (8.8’’) உயரத்திற்கு 1.2.4 (3/4’’) கலவையில் போடவேண்டியிருந்த போதிலும் 2011 ஒக்தோபர் மாத பௌதீக பரிசோதனையின் போது துண்டுக்கற்கள் இடப்பட்ட இடதுபக்க அத்திவாரத்தின் வீதியின் இறுதியிலிருந்து முன்னாலுள்ள 8.4 மீற்றர்களும் வலது பக்க அத்திவாரத்தில் 21 மீற்றர்களின் அத்திவாரம் தொடக்கம் 6½’’ அல்லது 0.169 மீற்றராக இருந்தது. மேலும் வலது பக்க அத்திவாரத்தில் 30 மீற்றர்களில் கொங்கிரீட் தட்டின் உயரம் 05 அங்குலம் அல்லது

0.128 மீற்றரானமையால் குறித்த மாதிரிகளுக்கு இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டன.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு